# பாடம் 15: வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைதல்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 20 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 21 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 22 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடங்களில், இஸ்ரயேல் மக்கள் எவ்வாறு கடவுளின் பராமரிப்பிலும் வழிகாட்டலிலும் 40 ஆண்டுகளாகப் பாலைநிலத்தில் அலைந்து திரிந்தனர் என்பதை நாம் கற்றோம். பாலை நிலத்தில் அவர்களைத் தமது மக்களாக்கும் உடன்படிக்கையின் அடையாளமாக சீனாய் மலை மீது கடவுள் பத்துக் கட்டளைகளை வழங்கினார் என்றும் நாம் கற்றோம். தற்போது பத்துக் கட்டளைகள் என்றால் என்ன என்று நாம் புரிந்து கொண்டுள்ளோம். இந்த பாடத்தில், தங்கள் மூதாதையரான ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபுக்கு தொடக்கத்தில் கடவுள் வழங்கிய நாடான வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் அவர்கள் இறுதியாக எப்படி நுழைந்தனர் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. எகிப்தில் இருந்து வெளியேறிய இஸ்ரயேலரின் முதல் தலைமுறையினர், கடவுளோடு ஒத்துழைக்க மறுத்ததாலும், நம்பகமற்ற பத்து ஒற்றர்களின் மிகைப்படுத்திய அறிக்கையை நம்பி, கடவுளில் விசுவாசம் கொண்ட இருவரை (யோசுவா மற்றும் காலேபு) நம்பாததாலும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைய முடியவில்லை என்பதை நினைவில் கொள்வோம். அது முதல், இஸ்ரயேலர் பாலைநிலத்தில் நீண்ட மற்றும் கடினமானப் பயணம் மேற்கொள்ள நேரிட்டது, ஏனெனில் தமக்கு கீழ்ப்படிய மறுத்த அந்தத் தலைமுறையினர் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதை கடவுள் அனுமதிக்கவில்லை.

2. அதே நேரத்தில், மோசேயும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழையப் போவதில்லை. கடவுள் அவரை வாக்களிப்பட்ட நாட்டிற்குள் நுழைய அனுமதிக்காததற்கு காரணம், மோசே கடவுளுக்கு கீழ்ப்படியாமல் இஸ்ரயேலர் முன்னிலையில் அவருக்கு எதிராகச் சினமுற்றார் (எண்ணிக்கை 20).

இஸ்ரயேலர் காதேசில் இருந்த பொழுது, மோசேயின் சகோதரி இறந்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார். அதே நேரத்தில் இஸ்ரயேலர் தண்ணீர் கிடைக்காததால், மோசேக்கு எதிராகப் புகார் கூறி அவர் மீது பழி சுமத்தினர். தெளிவாக, மோசேக்கு அது கெட்ட நேரமாக இருந்தது, குறிப்பாக இஸ்ரயேலர் தங்கள் கண்களின் முன்பாக பல அற்புதங்களைக் கண்டிருந்தாலும் ஒருபோதும் கடவுளில் நம்பிக்கை வைத்ததாகத் தெரியவில்லை. கடவுள் மோசே மற்றும் ஆரோனிடம் மக்களை ஒரு பாறையின் முன்பு ஒன்றுகூட்டி, பாறையில் இருந்து தண்ணீரை அழைக்குமாறும், அதனால் மக்கள் தாங்களும் விலங்குகளும் குடிக்கத் தண்ணீர் பெறுவர் என்றும் அறிவுறுத்தினார். கடவுள் கூறியதை அப்படியே செய்யாமல், சினமுற்றிருந்த மோசே மக்களிடம் வன்மையாகப் பேசிவிட்டு, தமது கோலால் அந்தப் பாறையை இருமுறை அடித்ததும் தண்ணீர் வெளிவந்தது. வார்த்தைகளால் நிகழ்ந்திருக்க வேண்டிய ஓர் அற்புதம் இயல்பான மனிதச் செயலாக மாறியது. (ஆம், துளைகளுடன் தண்ணீர் கொண்ட பெரியப் பாறைகள் பாலைநிலத்தில் காணப்படும், அவற்றை அடிப்பதன் வழியாக மக்கள் தண்ணீர் பெற்றனர். தண்ணீரை மட்டும் வழங்குவதைத் தாண்டி, மோசே வழியாக ஓர் அற்புதத்தை மக்களுக்கு காட்ட கடவுள் விரும்பினார், அதனால் அவர்கள் தம்மில் விசுவாசம் கொண்டு முணுமுணுப்பதை நிறுத்துவர். மோசே கடவுளின் அறிவுறுத்தல்களுக்கு கீழ்ப்படிய மறுத்ததால், அவரது திட்டத்தை வீணடித்தார். அதை விட மோசமாக, இஸ்ரயேலருக்கு முன்பாக கடவுளின் அதிகாரம் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அவர் அவமரியாதை செய்தார்.)

மோசேயின் தவறான நடத்தை மற்றும் இஸ்ரயேல் மக்களுக்கு முன்பாக கடவுளை மதிக்கத் தவறியதன் விளைவாக, கடவுள் மோசே மற்றும் (அவரது சகோதர்) ஆரோனிடம், "இஸ்ரயேல் மக்களின் கண்களுக்கு முன்பாக எனது தூயநிலையில் நான் விளங்கும்படி நீங்கள் என்னை நம்பாததால், நானட அவர்களுக்கு வழங்கும் நாட்டிற்குள் இந்த சபையை நீங்கள் நடத்திச் செல்ல மாட்டீர்கள்" என்றார் (எண் 20:12). மோசே இறப்பதற்குச் சற்றுமுன் (வாக்களிக்கப்பட்ட நாட்டின் எல்லையில் இருந்த) நெபோ மலைக்கு ஏறிச் சென்றார், அங்கு கடவுள் அவருக்கு இஸ்ரயேலர் நுழைய இருந்த வாக்களிக்கப்பட்ட நாட்டைக் காட்டினார். இன்றுவரை, அவர்

எங்கு அடக்கம் செய்யப்பட்டார் என்பது யாருக்கும் தெரியாது, ஏனெனில் அவரது கல்லறை ஒருபோதும் காணப்படவில்லை (இணைச்சட்டம் 34:1-7).

3. இஸ்ரயேலரை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நடத்திச் செல்ல நூனின் மகன் யோசுவா (மோசேயின் உதவியாளர்) கடவுளால் நியமிக்கப்பட்டார். கடவுளே இந்த அலுவலுக்காக யோசுவாவைப் பல ஆண்டுகளாகத் தயாரித்தார், மேலும் அவர் நாற்பது ஆண்டுகளாக மோசேயின் கீழ் சீடராக இருந்தார்.

*யோசுவா போரில் கடவுளைச் சார்ந்திருக்கப் பயிற்சி பெற்றார்* (விடுதலைப் பயணம் 17:8-16). அமலேக்கியருக்கு எதிரானப் போரை நடத்திய பொழுது, ஆரோன் மற்றும் கூரின் உதவியுடன் மோசே தம் கைகளை உயர்த்தி செபம் செய்தார்.

*யோசுவா கடவுளுக்கு நெருக்கமாக இருக்கப் பயிற்சி பெற்றார்* (விப 24:9-18). மோசே சீனாய் மலை மீது ஏறிச் சென்றபோது, ஆரோன், நாதாபு, அபிகூ, மற்றும் இஸ்ரயேலின் எழுபது மூப்பர்களைத் தம்மோடு கடவுளின் நிகழ்மையில் இருக்க அழைத்துச் சென்றார். அதன் பிறகு, யோசுவாவை இன்னும் உயரத்திற்கு அழைத்துச் சென்ற மோசே கடவுளோடு மேலும் ஆறு நாட்கள் செலவிட்டார். ஆறு நாட்களுக்குப் பிறகு, யோசுவாவை மேலும் நாற்பது நாட்கள் மோசே அங்கேயே தனியாக விட்டுச் சென்றார்.

*யோசுவா கடவுளிடம் செபிக்கவும் அவருக்குச் செவிமடுக்கவும் பயிற்சி பெற்றார்* (விப 33:7-11). "ஒரு மனிதர் தமது நண்பரிடம் பேசுவது போல்" ஆண்டவரிடம் பேச மோசே கூடாரத்திற்குள் சென்ற பொழுதெல்லாம், யோசுவா அவரோடு இருந்தார். மேலும் பெரும்பாலும், மோசே கூடாரத்தை விட்டு வெளியேறியப் பிறகும், ஆண்டவருடன் பேச யோசுவா அதனுள் இருந்தார்.

*யோசுவா மற்றவர்களைப் பணிவிடை செய்விக்கப் பயிற்சி பெற்றார்* (எண்ணிக்கை 11:24-29). ஆவியின் ஆற்றலைப் பெறுவதற்காக மோசே எழுபது மூப்பர்களை கடவுளின் கூடாரத்திற்கு கொணர்ந்தார்; அவ்வாறு நிகழ்ந்த பொழுது, அவர்கள் எல்லாரும் இறைவாக்குரைக்கத் தொடங்கினர். ஆனால் எல்தாதும் மேதாதும் கூடாரத்திற்கு வரவில்லை, அவர்கள் பாளையத்திற்கு வெளியே தங்கியிருந்தனர். வியப்பூட்டும் விதத்தில், கடவுளின் ஆவி அவர்கள் மீது வர அவர்களும் இறைவாக்குரைக்கத் தொடங்கினர். இந்த மனிதர்களால் மோசேயின் திருப்பணிக்கு மதிப்புக்குறைவு ஏற்படலாம் என்று யோசுவா அஞ்சினாலும், கடவுள் தாம் தேர்ந்தெடுத்தோரைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு மோசே அவருக்குக் கற்பித்தார்.

*யோசுவா சாத்தியமற்றதாகத் தெரியும் சூழல்களிலும் கடவுளிடம் விசுவாசம் கொள்ளப் பயிற்சி பெற்றார்* (எண் 13:1 - 14:45). கடவுள் இஸ்ரயேலருக்கு வாக்களித்த நாடான கானானின் எல்லையில், நாட்டை உளவு பார்க்கப் பன்னிரு ஒற்றர்களை அனுப்பினார். நாற்பது நாட்கள் கழித்து, (யோசுவா மற்றும் காலேபு தவிர) பன்னிரு ஒற்றர்களில் பத்து பேர் தற்போது அங்கு வாழ்வோரிடம் இருந்து நாட்டைக் கைப்பற்ற இஸ்ரயேலர் வலுவற்றோர் என்று தெரிவித்தனர். ஆனால் யோசுவா (காலேபோடு இணைந்து) கடவுள் அந்நாட்டை ஏற்கெனவே தமது மக்களின் கைகளில் ஒப்படைத்து விட்டார் என்று அறிவுறுத்தினர். இது சாத்தியமற்றதாகத் தெரிந்தச் சூழலிலும் கடவுளின் வாக்குறுதிகளில் யோசுவா விசுவாசம் கொண்டிருந்ததைக் காட்டுகிறது.

கடவுள் தாமே மோசேயின் வழிகாட்டலின் கீழ் தமக்கேற்றத் தலைவராக யோசுவாவை உயர்த்தியதால், மோசே இறந்ததும் அவரது இடத்தை எடுத்துக்கொள்ள யோசுவா நியமிக்கப் பெற்றார் (எண் 27:12-23; இச 34:9).

*இணைச்சட்டம் 31:7-8:* "மோசே யோசுவாவை வரவழைத்து, எல்லா இஸ்ரயேலரின் முன்னிலையில் அவரிடம் கூறியது, 'வலிமையாக இரு, உறுதியாக நில்'; யாவே (ஆண்டவர்) அவர்களின் மூதாதையருக்கு வழங்குவதாக வாக்களித்த நாட்டிற்குள் இந்த மக்களோடு நீ செல்ல வேண்டும்; நீயே அதை இவர்கள் உரிமையாக்கச் செய்ய வேண்டும். யாவே தாமே உன்னை நடத்துவார்; அவர் உன்னோடு இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகவோ அல்லது உன்னைக் கைவிடவோ மாட்டார். அச்சம் கொள்ளாதே, திகைப்பு அடையாதே!'"

4. மோசேயின் இறப்புக்காக இஸ்ரயேலர் முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடியப் பிறகு, இஸ்ரயேலருக்கு வாக்களித்த கானான் நாட்டை வெற்றிகொள்ளும் பொறுப்பை யோசுவாவுக்கு கடவுள் கொடுத்தார் (யோசுவா 1:2). மோசேயோடு இருந்தது போன்று யோசுவாவோடும் இருப்பதாக கடவுள் உறுதியளித்தார், மேலும் "வலிமையாக இரு, உறுதியாக நில்" (யோசு

1:6-7,9) என்று யோசுவாவுக்குத் திரும்பத்திரும்பக் கட்டளையிட்டார். இஸ்ரயேலர் கடவுளுக்கு கடமைப்பட்டுள்ளனர் என்பதை நினைவுபடுத்தி யோசுவா இந்த அலுவலைத் தொடங்கினார். பின்னர் அவர் இரண்டு ஒற்றர்களை எரிகோவை உளவு பார்க்க அனுப்பினார், அவர்களுக்கு ராகாபு என்ற விலைமகள் உதவினாள், எரிகோவின் அரசர் அவர்களைத் தேடிய வேளையில் தமது வீட்டில் ஒளித்து வைத்தார். பல நாட்கள் கழித்து, இருவரும் யோசுவாவிடம் திரும்பிச் சென்று, ஆண்டவர் உண்மையில் நாட்டை இஸ்ரயேலருக்கு தந்துள்ளார், கடவுள் தங்களுக்கு உதவுவதைக் கண்டு கானானில் வாழ்வோர் நடுங்குகின்றனர் என தெரிவித்தனர் (யோசு 2:24).

5. இஸ்ரயேலர் யோர்தான் நதியைக் கடந்தபோது, லேவியர் உடன்படிக்கைப் பேழையைச் சுமந்துகொண்டு ஆற்றுப்படுகையின் நடுவே நிற்க, அவர்கள் கடந்து செல்வதற்காக தண்ணீர் அற்புதமாகப் பிரிந்து வழிவிட்டது. செங்கடலைக் கடந்த நிகழ்வைப் போன்றே, யோர்தான் நதியிலும் மக்கள் முற்றும் உலர்ந்த தரையில் கடந்து சென்றனர். இந்த அற்புதத்தின் நினைவாக, அவர்கள் பன்னிரு கற்றூண்களை எழுப்பினர். நசியான்சுஸ் புனித கிரகோரி மற்றும் ஹிப்போ புனித அகுஸ்தீன் போன்ற திருச்சபைத் தந்தையர், யோர்தான் நதியின் தண்ணீர் பின்வாங்கிச் சென்றது திருமுழுக்கின் விளைவுகளைக் குறிப்பதாக விளக்குகின்றனர். திருமுழுக்கில் மனிதர் தமது வீழ்ச்சிக்கு முந்தியத் தொடக்க நிலைக்குத் திரும்புவதாக அவர்கள் கற்பித்தனர்.

6. யோர்தான் நதியைக் கடந்ததும், கில்காலில் எல்லா ஆண்களுக்கும் விருத்தசேதனம் செய்யப்பட்டு அவர்கள் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர் (யோசு 5:2). இந்நிகழ்வு மிகவும் தனிச்சிறப்பாக இருந்தது. ஆபிரகாமில் தொடங்கிய விருத்தசேதன நடைமுறை, இஸ்ரயேலர் எகிப்தில் இருந்து வெளியேறிய பொழுது நிறுத்தப்பட்டது, ஏனெனில் பாலைநிலத்தில் அந்தச் செயல்முறையைப் பாதுகாப்பாகச் செய்வது கடினமாக அல்லது ஆபத்தானதாக இருந்திருக்க வேண்டும் என்று புனித எரோனிமுஸ் (4ஆம் நூற்றாண்டு) கூறுகிறார்.

7. அவர்கள் ஏழு நாட்களாக எரிகோவைச் சுற்றிவந்தப் பிறகு அதைக் கைப்பற்றினர், இரு ஒற்றர்களைக் காப்பாற்றிய விலைமகள் ராகாபு மற்றும் அவளது குடும்பத்தினரைத் தவிர, நகரிலிருந்த மற்ற அனைவரும் வெளியே துரத்தப்பட்டனர் (யோசு 6:17-25). உடன்படிக்கைப் பேழையை குருக்கள் சுமந்து செல்ல அவர்கள் எரிகோவின் மதில்களை ஒவ்வொரு நாளும் ஒருமுறை என்று முதல் ஆறு நாட்களாகச் சுற்றி வந்தனர், ஏழாம் நாளில் மதில்களைச் சுற்றி ஏழு முறை அணிவகுத்தனர். ஏழாம் நாளில் ஏழு முறை சுற்றிவந்தப் பிறகு, குருக்கள் தங்கள் எக்காளங்களை ஊதினர், இஸ்ரயேலரும் உரத்தச் சத்தமிட மதில்கள் இடிந்து விழுந்தன.

8. யோசுவா செக்கேம் நகருக்கு அருகே கெரிசிம் மற்றும் ஏபால் மலைகளில் இஸ்ரயேலரை ஒன்றுகூட்டி மோசேயின் சட்ட நூலில் இருந்து அவர்களுக்கு வாசித்தார். அவர் கட்டிய பலிபீடத்தில் பலிகள் செலுத்தப்பட்டன; அவர் மோசேயின் சட்டங்களை கற்களில் எழுதி, கடவுளின் சட்டத்தின் வார்த்தைகளை மக்களுக்கு வாசித்தார். இஸ்ரயேலர் மற்றும் ஆண்டவருக்கு இடையிலான உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. (யோசு 8:30-35)

9. எரிகோவில் இருந்து, யோசுவாவும் இஸ்ரயேலரும் கானானின் மற்றப் பகுதிகளுக்கு நகர்ந்து சென்றனர், அந்நாட்டில் ஏற்கெனவே வாழ்ந்த மக்களுடன் செய்த ஒப்பந்தங்கள் அல்லது போர் வழியாக நகர்களைக் கைப்பற்றினர். அவர்கள் இறுதியாக (முழு நிலப்பரப்பையும் இல்லை என்றாலும்) ஏறக்குறைய கானான் முழுவதையும் வென்றனர். கடவுளின் அறிவுறுத்தல்கள் மற்றும் யோசுவாவின் தலைமையின் கீழ் அவர்கள் முழுமையாக வெற்றிபெற பல ஆண்டுகள் எடுத்தன. மொத்தத்தில், அவர்கள் 33 அரசர்களைத் தோற்கடித்தனர்.

10. இந்த வெற்றியில் கானானில் வாழ்ந்த எல்லாரும் இஸ்ரயேலரால் கொல்லப்பட்டது போல் தோன்றினாலும், பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தங்கள் வெற்றியை முன்னிறுத்திக் காட்ட வெறுமனே உச்சமான போர் மொழியை (அதாவது, மிகைப்படுத்தலை) பயன்படுத்தியுள்ளனர். இதன் காரணமாகவே, ‘‘எதுவும் உயிரோடு விடப்படவில்லை’’, ‘‘யாரும் உயிரோடு இல்லை’’, அல்லது ‘‘முற்றிலும் அழிக்கப்பட்டது’’ என்னும் கூற்றுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் உண்மையில், பெரிதும் மக்கள் ‘‘வெளியே துரத்தப்பட்டனர்’’ (விப 23:27-30) அல்லது தங்கள் நிலப்பரப்புகளைக் கைவிடக் கட்டாயப்படுத்தி அங்கே வாழ அனுமதிக்கப்பட்டனர் (இச 9:1) என்பதால், அது ஒரு படுகொலை அன்று. தாங்கள் வெல்லும் நிலையில் இருந்த நகர்களுடன் கூட இஸ்ரயேலர் அமைதி ஏற்படுத்த முயன்றனர், ஆனால் கிபயோனில் உள்ள இவ்வியரைத் தவிர வேறு எந்த நகரும் அதை ஏற்க விரும்பவில்லை (யோசு 11:19).

11. கானானில் வாழ்ந்தோர் மாசற்ற மக்கள் அல்லர் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களது பேய் சிலைகளின் வழிபாடு, அவர்களின் பாவம்நிறை பாலியல் செயல்கள், மேலும் அவர்களின் கானானிய தெய்வங்களுக்கு தங்கள் குழந்தைகளைப் பலியிட்டது ஆகிய காரணங்களால் கடவுள் அம்மக்களை தீயோர் என்று தீர்ப்பிட்டிருந்தார் (இச 9:5). அத்தகைய தீய நடைமுறையுள்ள நாட்டைத் தூய்மை செய்யவும், கானான் மக்களை அடிமைப்படுத்திய ஆன்மிக இருளைத் தோற்கடிக்கவும் கடவுள் இஸ்ரயேலருக்கு அதிகாரம் வழங்கினார்.

12. கானானில் இருந்த தீமை காரணமாக, வாக்களிக்கப்பட்ட நாட்டிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய இஸ்ரயேலரின் ஏழு பெரிய எதிரிகளை (இத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், இவ்வியர், மற்றும் எபூசியர்) குறித்து அவர்களுக்கு கடவுள் வழங்கிய அறிவுறுத்தல்: இவர்கள் அவர்களோடு கலப்புறவு கொள்ளவோ அல்லது அவர்களின் பண்பாடு மற்றும் சமய விழுமியங்கள் மற்றும் நடைமுறைகளைத் தழுவவோ கூடாது, மேலும் அவர்களின் சிலைகள் அழிக்கப்பட வேண்டும் (இச 7:1-3,5,25).

13. கானானின் வெவ்வேறு நிலப்பரப்புகளை வென்றபோது, முதுமை அடைந்திருந்த யோசுவா இஸ்ரயேலின் குலங்களுக்கு அவற்றின் அளவு மற்றும் தேவைகள் அடிப்படையில் ஒவ்வொரு குலத்திற்கும் நிலங்களைப் பகிர்ந்தளித்தார் (யோசு 13-21). அதிக நிலம் சீலோவில் சீட்டுப் போட்டு பகிரப்பட்டது. அத்தகைய நிலப்பகிர்வு மிக முக்கியமானது, ஏனெனில் அது குலங்கள் வேளாண் வேலை வழியாக பொருளாதாரத்தைப் பேண உதவும். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் அவர்கள் ஊர்களையும் கட்டியெழுப்பினர். இந்த நிலங்கள் அவர்களுக்கு கடவுள் வழங்கியவை என்பதால், இந்த நிலங்களை மற்ற எவருக்கும் வழங்கவோ விற்கவோ கூடாது.

குலங்களுக்குரிய சொத்துரிமை வழங்கப்படாத ஒரே குலத்தினர் லேவியர்கள் (அவர்கள் நகர்களைப் பெற்றிருந்தாலும்), ஏனெனில் இஸ்ரயேலின் சார்பாக கடவுளுக்கு பலி செலுத்தி இறை நிகழ்மையோடு இணைந்தப் பங்குள்ள குருத்துவ மக்கள் என்ற முறையில் கடவுளே அவர்களின் சொத்தாக இருந்தார் (இச 18:1; யோசு 13:14,33). மற்ற குலங்கள் வழங்கும் இந்தப் பலியில் சில உணவுப் பலிகளைத் தங்களுக்கென வைத்துக்கொள்ள லேவியர்கள் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு, மற்றக் குலங்களின் சமயத் தலைவர்களாக லேவியர்கள் ஒரு முக்கிய இடத்தைக் கொண்டிருந்தனர்; அவர்கள் இஸ்ரயேலர் எல்லாருக்கும் குருக்களாய் இருப்பர்.

14. எல்லா நேரத்திலும், கடவுள் இஸ்ரயேலருக்கு வாக்களிக்கப்பட்ட இந்த நாட்டை “பாலும் தேனும் பொழியும் நாடு” என்று விவரித்துள்ளார் (விப 3:8, எண் 14:8, இச 31:20). இது இஸ்ரயேலர் வேளாண்மைக்கு ஏற்ற வளமான மண்ணைக் கொண்ட நிலத்தை உரிமையாக்கி கொண்டதைக் குறிக்கிறது. அவர்களின் கால்நடைகள் அங்கு மேய்ச்சலைக் காண முடியும், இவ்வாறு தங்கள் உரிமையாளர்களுக்கு “பால்” உற்பத்தி செய்யும்; தேனீக்கள் ஏராளமானத் தாவரங்களில் இருந்து மதுவைச் சேகரித்து, “தேன்” உற்பத்தி செய்யும். இன்றும் கூட, புனித நாட்டின் (இஸ்ரயேல்) பல பகுதிகள் உண்மையில் வளமானதாகவும் பலவித கனிகள் மற்றும் காய்கறிகளை விளைவிப்பதாகவும் இருக்கின்றன. நவீனகால இஸ்ரயேலின் வடபகுதி நிலம் வளமான பிறை (பிறை வடிவில் இருக்கிறது) என்று அழைக்கப்படுகிறது.

15. தங்கள் நிலங்களில் வேளாண்மை செய்வதில், ஓய்வு ஆண்டான ஒவ்வோர் ஏழாம் ஆண்டிலும் தங்களது நிலங்களுக்கு ஓய்வை அனுமதிக்க அவர்கள் கோரப்படுகின்றனர் (லேவியர் 25:1-7). கடன், குத்தகை, அல்லது அடமானத்தால் மற்ற எவரிடமாவது அவர்கள் தங்களின் நிலங்களை இழந்தால், கடவுள் முதலில் வழங்கிய குலத்திடம் அந்த நிலங்கள் இறுதியாகத் திரும்ப அளிக்கப்பட வேண்டும். இஸ்ரயேலின் இந்தப் பொருளாதார மீளமைவு யூபிலி ஆண்டில், அது ஏழு ஆண்டுகளின் ஒவ்வோர் ஏழு சுழற்சிக்குப் பிறகு, அதாவது ஐம்பதாம் ஆண்டில் நடைபெறும் (லேவி 25:8-17). யூபிலி ஆண்டில் அனைத்து கடன்களும் தள்ளுபட செய்யப்படும், மேலும் அடிமைகளும் கூட விடுவிக்கப்படுவர். இந்த இரக்கத்தின் சட்டம் இஸ்ரயேலின் பல்வேறு சமூகங்களின் இடையே பொருளாதார மற்றும் அதிகாரச் சமநிலையைப் பாதுகாத்தது.

16. யோசுவா இறப்பதற்குச் சற்று முன்பு, இஸ்ரயேலின் எல்லா தலைவர்களையும் ஒன்றுகூட்டி கடவுள் அவர்களுக்கு மோசே வழியாக கொடுத்தச் சட்டத்திற்கு எப்பொழுதும் கீழ்ப்படியவும், சிலை வழிபாடுகளில் ஈடுபடாமல் இருக்கவும், நாட்டில் எஞ்சி வாழும் சிலை வழிபாட்டினரோடு கலப்புத் திருமணம் புரியாதிருக்கவும், எல்லாவற்றுக்கும் மேலாக கடவுளை அன்பு செய்யவும் நினைவூட்டினார் (யோசு 23:6-8,11-13; 24:14-24). மக்கள் விசுவாசத்தில் நிலைத்திருப்பதாக

வாக்களித்தனர், மேலும் அவர்களின் வாக்குறுதிகளுக்கு சாட்சியாக ஒரு கல்லை நிறுவினார் (யோசு 24:25-27). ஆனால் இந்த வாக்குறுதி நீண்ட காலத்திற்கு நிலைக்கப் போவதில்லை. கடவுளின் மக்களின் வரலாற்றில் இறுதியாக சிலை வழிபாடு ஒருங்கிணையப் போகிறது.

17. யோசுவா இறந்த பொழுதும், இஸ்ரயேலின் குலங்கள் கானானியருக்கு எதிராகப் போரைத் தொடர்ந்து கொண்டிருந்தன (நீதித்தலைவர்கள் 1), ஆனால் கானானியர் எல்லாரும் நாட்டில் இருந்து வெளியேற்றப்படவில்லை. அதனோடு, இஸ்ரயேலரைச் சுற்றி வாழ்ந்த மற்றக் குலங்களும் அவர்களோடு நட்புறவாக இல்லை.

18. காலப்போக்கில், இஸ்ரயேலர் யோசுவாவுக்கு கொடுத்த வாக்குறுதியில் சமரசம் செய்யத் தொடங்கினர். அவர்களில் சிலர் கானானியச் சிலைகளான பாகால் மற்றும் அஸ்தரேத்தையும், அருகிலுள்ள நாடுகளின் மற்ற தெய்வச் சிலைகளையும் வழிபடத் தொடங்கினர். அவர்களை நெறிப்படுத்த, சுற்றியுள்ள தேசங்கள் இஸ்ரயேலின் நிலங்களுக்குள் நுழையவும், அவர்களின் பயிர்கள் மற்றும் உடைமைகளைக் கொள்ளையிடவும் ஆண்டவர் அனுமதித்தார் (நீத 2:6-15). மக்கள் உதவிக்காகக் கூக்குரலிட்ட பொழுது, கடவுள் அவர்களுக்காக வருந்தினார். கடவுள் இஸ்ரயேலில் தலைவர்களை எழுப்பினார், அவர்கள் நீதித்தலைவர்கள் எனப்படுகின்றனர்.

19. நீதித்தலைவர்கள் சில நேரங்களில் சட்ட வழக்குகளை (நீத 4:4-5), ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் தங்கள் எதிரிகளுக்கு எதிராக இஸ்ரயேலரை நடத்த கடவுள் தேர்ந்தெடுத்த படைத்தலைவர்களாக அறியப்படுகின்றனர் (நீத 3 - 16). இந்த நீதித்தலைவர்கள் கடவுளின் வழிகளில் இஸ்ரயேலை நடத்துவதில் மிகக் குறைவாகவே வெற்றி பெற்றனர், ஏனெனில் கடவுளுக்குப் பணிவது மற்றும் அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதற்கு இடையே இஸ்ரயேல் ஊசலாடியது. அவர்களின் கிளர்ச்சி நிலையான பிரச்சனையாகத் தொடர்ந்தது.

20. நாம் ஒவ்வொருவருமே கடவுளின் எதிரிகளுக்கு எதிரானப் போரில் நமது தலைமுறையினர் போரிடுவதற்கு வழிநடத்தும் அழைப்பைக் கொண்டுள்ளோம். மோசே மற்றும் யோசுவாவின் காலத்தில் கடவுளின் எதிரிகளாக இருந்த சிலை வழிபாட்டு மக்களைப் போன்றே, நமது காலத்தில் உள்ள அறநெறியற்றக் கருத்தியல்களின் வடிவிலுள்ள சிலைகளுக்கு எதிராகப் போரிட நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நமது தலைமுறையினரை நடத்தும் பொறுப்பை ஏற்க இயலுமா என்பது போராட்டத்திற்காகப் பயிற்சி பெறும் நமது விருப்பத்தைச் சார்ந்துள்ளது. நாம் யோசுவாவைப் போன்ற அதே மனப்போக்கைக் கொண்டிருந்தால், நமது வாழ்நாளில் கடவுளுக்கான குறிப்பிட்ட அலுவல்களை நிறைவேற்ற அவர் நம்மைப் பிரித்து வைப்பார்.

21. வாழ்வில் நமது முயற்சிகளில் கடவுள் ஆசியளிக்க ஒரே வழி அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து அவரது வழியில் நாம் செயல்பட வேண்டும். அடிக்கடி, வாழ்வில் நாம் துன்புறும் வாய்ப்புக்கேடுகள் அவருக்கு கீழ்ப்படியாமையின் விளைவுகளே, இவ்வாறு நமது நெறிகேடானத் தெரிவுகள் அல்லது முன்மதியற்ற முடிவுகளே இயல்பாக விடயங்கள் தவறாகச் செய்கின்றன. வழியின் ஒவ்வோர் அடியிலும் கடவுளின் சட்டங்களால் வழிநடத்தப்படுவது மிகவும் முக்கியம், ஏனெனில் இந்தச் சட்டங்கள் நம்மைக் கட்டுப்படுத்த அல்ல, மாறாக நாம் சுதந்திரமாகவும் இறை ஆசிகளோடும் வாழ்வதை உறுதி செய்யவே இருக்கின்றன.

22. நமது வாழ்வில் கடவுள் கட்டளையிடுவதைச் செய்கின்றத் துணிவை நமது இதயங்களில் வளர்த்துக்கொள்வதும் முக்கியமானது. சில நேரங்களில், கடவுள் நம்மிடம் கோருகின்ற அலுவல்கள் நாம் சமாளிக்க இயன்றதை விடப் பெரிதாகத் தெரிகிறது. ஆனால் நமக்கு அவரது கட்டளைகள் யோசுவாவுக்கு வழங்கப்பட்ட அதே ஊக்குவிப்பின் வார்த்தைகளோடு இணைந்துள்ளன: “யாவே (ஆண்டவர்) தாமே உன்னை நடத்துவார்; அவர் உன்னோடு இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகவோ அல்லது உன்னைக் கைவிடவோ மாட்டார். அச்சம் கொள்ளாதே, திகைப்பு அடையாதே!” (இச 31:8). துணிவோடு இருத்தல் என்பதற்கு நாம் நினைப்பது போல் நமது சொந்த வலிமை மற்றும் திறமைகளால் அந்த அலுவலை நிறைவுசெய்யப் போதுமான வலிமையோடு நாம் இருக்கிறோம் என்று பொருளன்று. மாறாக, நம்மை வழிநடத்த, பாதுகாக்க, மற்றும் அவர் நம்மிடம் கேட்பதைச் சரியாகச் செய்ய வைக்க கடவுள் திறனுள்ளவர் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்பதே அதன் பொருள்.